முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 07.10.2025 அ.வ.எண். 63/2023 வா.சா.1.ஆனந்தஜோதி, க/பெ. சிவலிங்கம்.,

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் படிக்கவில்லை. என் பிறந்த தேதி என்ன என்றால் 1968 ம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகமில்லை.இந்த தாவாவில் எனது தரப்பு ஆவணமாக ஆதார் அடையாள அட்டையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா சா ஆ 3 தான் மேற்படி ஆதார் அடையாள அட்டை என்றால் சரிதான். ஆதார் அட்டையில் குறிப்பிட்டுள்ள பிறந்த தேதி, முகவரி அனைத்தும் சரிதான் என்றால் சரிதான். எனக்கு எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் ஞாபகமில்லை. திருமணத்திற்கு முன்பு எனக்கு குடும்ப அட்டை எங்கு ,இருந்தது என்றால் பாலார்பதியில் இருந்தது. காளியப்ப கவுண்டரின் அம்மா பெயர் என்ன என்றால் சுப்பாத்தம்மாள் ஆகும். காளியப்ப கவுண்டருக்கு எந்த ஊரில் எந்த புல எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் கொண்ட பூமி உள்ளது என்றால் பாலார்பதியில் 15 ஏக்கர் பூமி உள்ளது. சர்வே எண் தெரியாது.

2) காளியப்ப கவுண்டர் பெயரில் உள்ள சொத்துகளை பெயர் மாற்றம் செய்வதற்கு மனு கொடுத்தோமா என்றால் இல்லை. காளியப்ப கவுண்டரின் வாரிசு சான்றிதழ் வேண்டி கிணத்துக்கடவு வட்டாட்சியரிடம் மனு கொடுத்த போது மேற்படி மனுவுடன் என்னென்ன ஆவணங்கள் இணைத்துக் கொடுத்தோம் என்றால் ஞாபகமில்லை. காளியப்ப கவுண்டருக்கு ரத்தினம்மாள் மனைவி என்றால் சரிதான்,. தெய்வஜோதி மகள் என்றால் சரிதான். அவர்கள் இருவர் மட்டும் தான் காளியப்ப கவுண்டருக்கு வாரிசுகள் என்றால் சரியல்ல. நானும் வாரிசு தான். வாரிசு சான்று கேட்டு மனு கொடுத்த போது 1, 2

ஒப்பம்/– (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி .

பொள்ளாச்சி.

பிரதிவாதிகளிடம் நான் கையொப்பம் பெற்றேனா என்றால் இல்லை. காளியப்ப கவுண்டருக்கு வாரிசு சான்றிதழ் விண்ணப்பிக்கும் போது 1, 2 பிரதிவாதிகளின் அடையாள அட்டைகள் எதுவும் கொடுத்து விண்ணபித்தோமா என்றால் இல்லை, எதற்காக வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்தேன் என்றால் காளியப்ப கவுண்டரின் வாரிசு என்பதற்காக மனு கொடுத்தேன்.

3) 1, 2 பிரதிவாதிகளுக்குபாத்தியப்பட்ட சொத்து மீது வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் நான் காளியப்ப கவுண்டருக்கு வாரிசு இல்லை என்று 1 ம் பிரதிவாதி பிரதிவாதம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் ஆனால் நானும் ஒரு வாரிசாவேன். மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது என்றும் அந்த வழக்கில் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்வதற்காகத்தான் இந்த தாவாவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த தாவாவில் 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வாதத்தை நான் படித்தேனா என்றால் இல்லை. அவர்கள் என்ன எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

4) 1, 2 பிரதிவாதிகள் கடந்த 06.08.1968 ம் தேதியன்று இறந்து போன காளியப்ப கவுண்டருக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு அ.வ.எண். 272/2016 வழக்கு தாக்கல் செய்து அதை 1, 2 பிரதிவாதிகள் தான் வாரிசுகள் என்று உத்தரவு பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி ரத்தினம்மாள், 2 ம் பிரதிவாதி தெய்வஜோதி ஆகியோருக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றால் நானும் ரத்தினம்மாளின் மகள் ஆவேன். காளியப்ப கவுண்டர் இறந்த பின்னிட்டு 1, 2

ஒப்பம்/– (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி .

பொள்ளாச்சி.

பிரதிவாதிகள் தான் அவரது சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். காளியப்ப கவுண்டரின் மகள் தான் நான்என்பதை காண்பிக்க ஏதேனும் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5) 1, 2 பிரதிவாதிகளின் அறியாமையை பயன்படுத்தி அவர்களது சொத்துக்களை அபகரிக்கும் நோக்கத்தில் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா சா ஆ 3 ஆவணத்தில் என்னுடைய பிறந்த வருடத்தை காண்கையில் காளியப்ப கவுண்டர் இறந்ததற்கு பிறகு 2 ஆண்டுகள் கழித்து பிறந்ததாகத்தான் உள்ளது என்றால் சரியல்ல. எனது அப்பா இறக்கும் ே பாது நான் கைகுழந்தையாக இருந்தேன். காளியப்ப கவுண்டர் இறந்ததற்கு பிறகு 2 ஆண்டுகள் கழித்து பிறந்ததாகத்தான் உள்ளதால் காளியப்ப கவுண்டரின் வாரிசு என்று நான் உரிமை கோருவது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல., ஆகவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) இந்த தாவாவில் எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ஆவணம் எந்த அலுவலகத்தில் எப்போது வாங்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை. காளியப்ப கவுண்டருக்கு நான் மட்டும் தான் வாரிசு என்று கிணத்துக்கடவு வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி வட்டாட்சியர் அலுவலகத்தில் என்னுடைய பெயரை மட்டும் எழுதி காளியப்ப கவுண்டருக்கு வாரிசு சான்றிதழ் கேட்டேன் என்றால் சரிதான். காளியப்ப கவுண்டர் இறந்து 50 வருடங்களுக்குமேல் கடந்து விட்டதால்

ஒப்பம்/— (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி .

பொள்ளாச்சி.

நீதிமன்றத்தின் மூலம் வாரிசு சான்றிதழ் பெற்றுக்கொள்ளும்படி மனுவை நிராகரித்தார் என்றால் சரிதான். கிணத்துக்கடவு வட்டாட்சியரிடம் 1, 2 பிரதிவாதிகளை சேர்த்து வாரிசு சான்றிதழ் கேட்கவில்லை என்றால் சரிதான்.

2) 1, 2 பிரதிவாதிகள் 3 ம் பிரதிவாதிக்கு எதிராக மனு தாக்கல் செய்து 1, 2 பிரதிவாதிகள் தான் வாரிசுகள் என்று வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பு பெற்ற விவரம் தெரியும் என்றால் சரிதான்,மேற்படி விவரம் எப்போது எனக்கு தெரியும் என்றால் ஞாபகமில்லை. மேற்படி விவரம் இந்த தாவா தாக்கல் செய்வதற்கு முன்பே எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி விவரம் தெரிந்தும் மேற்படி வாரிசு சான்றிதழ் செல்லத்தக்கது அல்ல என்ற நான் வழக்கோ தாசில்தாரிடம் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. நான் இந்த தேதியில் தான் பிறந்தேன் என்பதை காண்பிக்க சரியான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3) தாவாப்படி வா சா ஆ 1 மற்றும் 3 ஆவணங்கள் ஒன்றுடன் ஒன்று முரண்பட்டிருப்பதால் இந்த வழக்கு செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. ஏற்கனவே 1, 2 பிரதிவாதிகள் 3 ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்க தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றுள்ள நிலையில் அதன்மீது மேல் நடவடிக்கை மேற்கொள்ளாமல் இந்த தாவா தாக்கல் செய்திருப்பது செல்லத்தக்கது என்றால் சரியல்ல. காளியப்ப கவுண்டரின் வாரிசு என்பதை காண்பிக்க முறையா ன ஆவணங்களோ சாட்சியங்களோ இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/– (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி .

பொள்ளாச்சி